இனிஷியல் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. விரைவில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 79, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

79—

திருப்பூர் தனலட்சுமி பஞ்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை

*26527–திரு. **வெ. பழனிசாமி :**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பூர் தனலட்சுமி பி-மில் மூடப்பட்டதால் எவ்வளவு தொழிலாளர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஆ) ஆலையைத் திறப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 277 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

(ஆ) திருப்பூர் தனலட்சுமி மில்ஸ் பி யூனிட் பஞ்சாலையை மூட அனுமதி கேட்ட நிர்வாகத்திற்கு தொழிலாளர் நல ஆணையர் அனுமதி மறுத்து ஆணையிட்டார். அவ்வாணையை மறுபரிசீலனை செய்யக்கோரி அரசுக்கு சமர்ப்பித்த மனுவினை அரசு ஆராய்ந்து இத்தாவாவை 6-4-93ஆம் நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணை எண் 250 மூலம் சென்னை சிறப்பு தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு விட்டு உத்திரவு பிறப்பித்துள்ளது. இப்பிரச்சினை தற்போது சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின்-முன் நிலுவையில் உள்ளது.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் வர்க்கத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் இவ்வாண்டு

1994 நவம்பர் 9]

தொழில் தகராறே இல்லை என்கிற அளவுக்கு போனஸ் பிரச்சினை சுமூகமாக முடிந்து, தொழிலாளர்களுடைய வாழ்வில் நிறைவு ஏற்படுகிற அளவுக்கு தொழிலாளர் வர்க்கத்தினுடைய சார்பாக உயரிய ஆட்சியை நடத்துகிற எங்களுடைய இதய தெய்வத்தின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பூர் தனலட்சுமி மில்ஸ் 'பி' யூனிட் பிரச்சினை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சிறப்பு நீதி மன்றத்தில் இருந்து வருகிறது. அந்த ஆலையை நிர்வாகத்தினர் திறக்கக்கூடிய சாத்தியம் இல்லை என்பது அரசுக்கு ஏற்கெனவே தெரியும். ஆகவே வழக்கைத் துரிதமாக முடிக்கிற நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதையும், அதற்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்விழந்து நிற்கிற தொழிலாளர் வர்க்கத்திற்கு நிர்வாகத்தின் மூலமாக சிறப்பு உதவி ஏதாவது தருவதற்கான அறிவுரை வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கேற்ப, மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, இதுபோன்ற சின்னஞ்சிறு ஆலைகள் நலிவடைந்த ஆலைகள் என்ற பெயரால் பல பகுதிகளில் நிர்வாகத்தினர் வேலை இழப்பை ஏற்படுத்தி, அதன்மூலமாக அந்த ஆலைகளை மற்றவர்களுக்கு விற்கிற சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதே நிலையில்தான் அந்த மில்லின் 'பி' யூனிட்டையும் விற்பதற்குண்டான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிரச்சினை முடிகிறவரை ஆலையை மற்ற நபர்களுக்கு விற்காத சூழ்நிலையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.